RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2541

# Improving Reading Fluency in Students with Low Reading ability through a Blended Learning Approach

**Kingston Pal Thamburaj [a, *], Pon Sasikumar [a], G. Ramesh [b]**

[a] National Institute of Education, Nanyang Technological University, Singapore
[b] Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur-610005 Tamil Nadu, India
*Corresponding author Email: palthamburaj.k@nie.edu.sg

DOI: https://doi.org/10.54392/ijot2541
Received: 11-06-2025; Revised: 16-10-2025; Accepted: 23-10-2025; Published: 05-11-2025

**Abstract:** The main objective of this study is to explore the possibilities of using collaborative learning methods to improve reading fluency among students with reading difficulties. The study will consider various collaborative learning methods, their relevance to reading activities, and the impact they may have on students' reading ability. In particular, it will examine how collaborative learning methods can help address challenges in Tamil language reading in a bilingual environment like Singapore. The results of this study will open up new avenues for improving the learning of students who struggle with reading. Teachers will be able to use collaborative learning strategies in their classrooms to gain effective approaches to improving students' reading skills. Furthermore, this study will highlight the importance of reading instruction in the education system and the role of collaborative learning in the holistic development of students. This will be useful for Tamil language learners in the Singaporean educational environment as it will help them improve their language skills and academic success. Although previous studies have suggested that collaborative learning methods are effective in improving reading skills, much more needs to be done to understand which collaborative learning methods are most effective, especially for students who struggle with reading. Furthermore, there is little research on how collaborative learning can best be used to address the specific difficulties in Tamil reading in a bilingual environment like Singapore. This study attempts to fill this gap by examining the unique role of collaborative learning in improving the fluency of students who struggle with reading. In particular, it proposes to compare the effectiveness of different collaborative learning methods and to examine which methods are most suitable for which types of students.

**Keywords:** Students, Reading, Struggle, Tamil Language, Singapore

---

# வாசிப்புத் திறன் குறைந்த மாணவர்களிடம் சரளமாக வாசிக்கும் திறனைக் கூடிக் கற்றல் முறைமை வாயிலாக மேம்படுத்துதல்

**கிங்ஸ்டன் பால் தம்புராஜ் [அ *], சசிக்குமார் பொன் அழகு [அ], க. ரமேஷ் [ஆ]**

[அ] தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

[ஆ] தமிழ்த்துறை, தமிழ்நாட்டு மத்தியப்பல்கலைக்கழகம், நீலக்குடி வளாகம், திருவாரூர், இந்தியா

## முன்னுரை

தமிழ்ப்பெரு மூதாட்டியான ஔவையார், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே "நீட்டோலை வாசியானை நெடுமரம்" என்றுரைத்ததன் மூலம், 'வாசிப்பு' என்ற சொல்லின் ஆளுமையையும், அதன் இன்றியமையாத தேவையையும் உணர்த்தியுள்ளார் என்பதை உணர முடிகிறது. 'படித்தல்', 'வாசித்தல்' ஆகிய இருச்சொற்களும் பொதுவாக ஒரே பொருளைக் குறிக்கின்றன. "செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற முதுமொழிக்கேற்ப, தமிழ்மொழியைப் புலம் பெயர்ந்த மக்கள் வாழும் நாடுகளில் மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு மேம்படுத்த, மொழித்திறன்

பயிற்சியில் குறிப்பாகப் படித்தல்திறனை மாணவர்களிடையே எளிய வழிமுறைகளைப் பின்பற்றிக் கற்பிப்பதன் மூலம் வாசித்தலில் மாணவர்கள் சிறந்த நிலையை அடைய முடியும். இன்றைய சூழலில், ஆய்வாளர் மாணவர்களிடையே பெரும்பான்மையாகக் கண்டறிந்த சிக்கல் அவர்களின் வாசிப்புத் திறனே. ஒருவர் சிறப்பாக எழுதவும், சிறந்த படைப்புகளை உருவாக்கவும் வாசிப்புத் திறனை முழுமையாகப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். இதன் அடிப்படையிலேயே, ஆய்வாளர்கள் மாணவர்களிடையே காணப்படும் இந்த வாசிப்புத் திறன் குறைபாட்டை நீக்க முயற்சி மேற்கொண்டனர். மேலும், கல்வியின் மைய நோக்கம் அறிவுசார் திறனை வளர்ப்பதேயாகும். இந்த அறிவுசார் திறன் மனிதநேய விழுமியங்களோடு ஒருங்கிணைந்தால்தான் கல்வியின் இலக்கு முழுமையடையும். வலுவான அறிவுசார் சிந்தனையைக் கட்டமைக்கப் பரந்த வாசிப்புத் திறன் இன்றியமையாதது. ஒரு தனி நபரின் இன்னல்களைத் தீர்க்கவும், சுயாதீனமான முடிவுகளை எடுக்க வாசிப்புத் திறனே சிறந்த வழிக்காட்டியாகத் திகழ்கிறது. வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான முதன்மையான களம் புத்தகங்களே என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வாசிப்பு என்பது கல்வி கற்றலில் தனி மனித வளர்ச்சிக்கு ஆணி வேர் போன்றது. ஒரு மாணவன் புதிய அறிவைப் பெறுவதற்கும், உலகத்தைப் புரிந்து கொள்வதற்கும், தன் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் வாசிப்புத் திறன் இன்றியமையாதது. ஆரம்பக் கல்வியில் வாசிப்புத் திறனைப் பெறுவதில் சிரமம் உள்ள மாணவர்கள், கல்விப் பயணத்தின் பிற்கால நிலைகளிலும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். சரளமாக வாசிக்கும் திறன் என்பது வெறும் வார்த்தைகளை ஒப்பிப்பதோடு மட்டுமல்லாமல், வாக்கியங்களின் பொருளைப் புரிந்துகொண்டு, தங்குதடையின்றி வாசிப்பதாகும். இந்தத் திறன் மாணவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிப்பதோடு, பிற பாடங்களில் அவர்கள் சிறந்து விளங்கவும் உதவுகிறது.

## வாசிப்புத் திறன் குறைபாடுகளுக்கான காரணங்கள்

வாசிப்பில் இடர்ப்பாடுடைய மாணவர்கள் பல்வேறு காரணங்களால் சிரமப்படுகின்றனர். எழுத்துகளை அடையாளம் காண்பதில் சிக்கல், சொற்களைப் புரிந்துகொள்வதில் சிரமம், வாசிக்கும்போது ஏற்படும் தயக்கம் போன்ற காரணங்களால் அவர்கள் சரளமாக வாசிப்பதில் பின்னடைவைச் சந்திக்கின்றனர். இப்பின்னடைவு அவர்களின் கற்றல் வேகத்தையும், பாடங்களின் மீதான ஆர்வத்தையும் பாதிக்கிறது. சரளமாக வாசிக்க முடியாததால், அவர்கள் வகுப்பறை நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்க முடியாமலும், சக மாணவர்களுடன் ஒப்பிடும்போது தாழ்வு மனப்பான்மை அடையவும் வாய்ப்புள்ளது. எனவே, வாசிப்பில் இடர்ப்பாடுடைய மாணவர்களின் சரள வாசிப்புத் திறனை மேம்படுத்துவது கல்வியின் முக்கிய தேவையாகும். வாசிப்புத் திறனில் ஏன் எதிர்பார்த்த அளவு சிறந்து விளங்க முடியவில்லை என்ற கேள்வி இந்த ஆய்வின் முக்கிய கவனத்தைப் பெறுகிறது. மாணவர்களின் வாசிப்புத் திறனில் அவர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சிக்கல்களை அடையாளம் கண்டு, அவற்றைக் களைவதற்கான பொருத்தமான அணுகுமுறைகளை மேற்கொள்வதே இந்த ஆய்வின் முதன்மையான நோக்கமாகும். வகுப்பறைச் சூழலில் கண்டறியப்பட்ட முக்கியப் பிரச்சினை என்னவென்றால், பெரும்பாலான பையப்பயிலும் மாணவர்கள் சரளமாக வாசிப்பதிலும், வாசித்த கருத்துக்களை முழுமையாகப் புரிந்துகொள்வதிலும் சில சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதன் விளைவாக, அவர்களால் வாசிக்கும் கருத்துகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், தங்கள் சொந்தக் கருத்துகளைத் துல்லியமாகவும், தெளிவாகவும் முன்வைக்கவ முடிவதில்லை. இந்த வாசிப்புத் திறன் குறைபாடுகளுக்கான காரணங்களாக ஆய்வாளர்கள் பின்வரும் சில முக்கிய அம்சங்களைக் கண்டறிந்துள்ளனர்:

1. திசை சார்ந்த குழப்பங்கள்: மாணவர்கள் "முன் / பின்" மற்றும் "வலது / இடது" போன்ற இடம் சார்ந்த சொற்களைப் புரிந்துகொள்வதிலும், பயன்படுத்துவதிலும் குழப்பம் அடைவது வாசிப்புப் புரிதலைப் பாதிக்கலாம். சொற்களின் வரிசையை அடையாளம் காண்பதிலும், பக்கங்களை ஒழுங்காகப் பின்பற்றுவதிலும் இது சிரமத்தை ஏற்படுத்தக்கூடும்.

2. அகரவரிசை எழுத்துகளைக் கற்பதில் சிரமம்: அகரவரிசைப்படி எழுத்துகளைக் கற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள், சொற்களை அடையாளம் காண்பதிலும், அகராதியைப் பயன்படுத்துவதிலும் சிக்கல்களை உருவாக்கலாம். இது வாசிப்பு வேகத்தையும், சொற்களை நினைவுகூரும் திறனையும் பாதிக்கலாம்.

3. சொற்களை நினைவுகூர்தலிலும் பொருட்களை அடையாளங்காண்பதிலும் சிரமங்கள்: வாசிக்கும்போது சொற்களை உடனடியாக நினைவுகூருவதிலும், படங்களுடன் சொற்களைப் பொருத்துவதிலும் உள்ள சிரமங்கள் வாசிப்புப் புரிதலுக்குத் தடையாக இருக்கலாம். இது வாசிப்பை மந்தமாக்குவதுடன், ஆர்வத்தையும் குறைக்கக்கூடும்.

4. ஒலி இயைபுடைய சொற்களை அடையாளம் காணுதல், அமைத்தல், வார்த்தைகளின் அசைகளை எண்ணுதல் ஆகியவற்றில் சிரமங்கள் (கேள்வியொலி விழிப்புணர்வு): ஒரே மாதிரியான ஒலியைக் கொண்ட சொற்களை அடையாளம் காண்பதிலும், அவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதிலும் மாணவர்கள் சிரமப்படலாம். மேலும், ஒரு சொல்லில் உள்ள அசைகளின் எண்ணிக்கையை உணர்வதும், பகுப்பதும் அவர்களுக்குக் கடினமாக இருக்கலாம். இது வாசிப்புச் சரளத்தையும், சொற்களின் அமைப்பைப் புரிந்துகொள்ளும் திறனையும் பாதிக்கும்.

5. வார்த்தைகளின் பல்வேறு ஒலியலகுகளைக் கேட்பதிலும், பகுப்பதிலும் உள்ள சிரமங்கள் (ஒலியனின் விழிப்புணர்வு): ஒரு சொல்லில் உள்ள தனித்தனி ஒலிகளைக் (ஒலியன்கள்) கேட்பதிலும், அவற்றை அடையாளம் கண்டு பிரிப்பதிலும் உள்ள சிரமங்கள் வாசிப்பு, எழுத்துத் திறன்களுக்கு அடிப்படையானவை. இந்த ஒலியன் விழிப்புணர்வுக் குறைபாடு சொற்களை ஒலிக்கவும், எழுதவும் சிரமத்தை ஏற்படுத்தும்.

6. சொற்களின் வெவ்வேறு உச்சரிப்பு முறைகளை (ஒலிபேதங்கள்) அடையாளம் காண்பதில் உள்ள சிரமங்கள்: மாணவர்கள் ஒரு சொல்லின் பல்வேறு வடிவங்களையும், அவற்றின் அர்த்தங்களையும் புரிந்துகொள்வதைத் தடுக்கலாம்.

7. எழுத்துகளின் ஒலிகளைக் கற்பதில் உள்ள சிரமங்கள்: ஒவ்வோர் எழுத்துக்கும் உரிய ஒலியைப் புரிந்துகொள்வதிலும், நினைவில் வைத்துக் கொள்வதிலும் உள்ள சிரமங்கள் வாசிப்புக்கு அடிப்படையானவை. இந்தச் சிரமம் புதிய சொற்களை வாசிப்பதையும், ஏற்கனவே தெரிந்த சொற்களை அடையாளம் காண்பதையும் கடினமாக்கும்.

8. சொற்களை அவற்றின் சரியான அர்த்தத்தோடு இணைத்துப் பார்ப்பதில் உள்ள சிரமங்கள்: வாசிக்கும் சொற்களின் பொருளைப் புரிந்துகொள்வதிலும், அவற்றைப் பொருத்தமான சூழலுடன் தொடர்புபடுத்துவதிலும் உள்ள சிரமங்கள் வாசிப்புப் புரிதலை வெகுவாகப் பாதிக்கும். இது வாசிப்பின் நோக்கத்தையே சிதைத்துவிடும்.

மேலும், பேச்சின் குறியீடுகளைப் புரிந்துகொள்வதில் ஏற்படும் பார்வைப் புலனுணர்ச்சிக் குறைபாடுகள்கூட இத்தகைய வாசிப்புச் சிக்கல்களுக்கு வழிவகுக்கலாம். ஐரோப்பிய மொழிகள் பலவற்றில், இந்தக் குறைபாடு ஒலியமைப்புடைய எழுத்துகளை எழுதும் முறைகளில் ஏற்படும் சிக்கலாக வெளிப்படுகிறது. பேச்சுத் திறமையில் ஏற்படும் தாமதம் மற்றும் பேச்சுமொழிக் குறைபாடுகள் ஆகியவை கேள்வியொலியைக் கையாண்டுப் பகுத்துணரும் திறனில் ஏற்படும் கோளாறுகளால் விளையும் பேச்சுப் பிறழ்ச்சியாக வெளிப்பட்டு, அதீதத் தயக்கம் நிறைந்த திக்குதல்ல் மற்றும் குழம்பிய பேச்சாக வெளிப்படலாம். சிங்கப்பூரின் இருமொழிச் சூழலில் (நா. கோவிந்தசாமி, 1983), மாணவர்கள் இரண்டு மொழிகளின் ஒலியமைப்புகளையும், எழுத்து முறைகளையும் கையாள வேண்டியிருப்பதால், இந்த வகையான கேள்விப் புலன் சார்ந்த பிரச்சினைகள் வாசிப்புத் திறனை மேலும் சிக்கலாக்கலாம். ஆகவே, மாணவர்களின் வாசிப்புத் திறனில் காணப்படும் இந்த சிக்கல்களை ஆழமாகப் பகுத்தாய்வதுடன், அவற்றிற்கான காரணங்களை முறையாக அடையாளம் காண்பது, வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான பொருத்தமான கற்பித்தல் உத்திகளை வகுப்பதற்கு அவசியமானதாகும். குறிப்பாக, சிங்கப்பூர் போன்ற பல்லினம் வாழும் இருமொழிச் சூழலில், மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளையும்,

மொழிப் பின்னணியையும் கருத்திற்கொண்டு வாசிப்புப் பயிற்சி அளிப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

## கூடிக் கற்றல் முறைமையின் அறிமுகம்

கூடிக் கற்றல் முறைக் கற்றல் என்பது மாணவர்கள் ஒரு பொதுவான இலக்கை அடைவதற்காகச் சிறிய குழுக்களாக இணைந்து பணியாற்றும் ஒரு கற்பித்தல் முறையாகும். இந்த முறையில், ஒவ்வொரு மாணவரும் குழுவின் வெற்றிக்குப் பொறுப்பாகிறார்கள், ஒருவருக்கொருவர் உதவிக்கொள்கிறார்கள், கலந்துரையாடலில் ஈடுபடுகிறார்கள். கூடிக் கற்றல் முறைக் கற்றல் மாணவர்களின் சமூகத் திறன்கள், திறானாய்வுச் சிந்தனை, சிக்கல் தீர்க்கும் திறன்கள் ஆகியவற்றை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களின் கற்றல் ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. வாசிப்புக் கற்பித்தலில் கூடிக் கற்றல் முறையைப் பயன்படுத்துவது, மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு வாசிப்பதில் உள்ள தயக்கத்தை நீக்கவும், புதிய சொற்களைப் புரிந்துகொள்ளவும், வாசிப்புப் பொருளை ஆழமாக அணுகவும் வழிவகுக்கும். சிங்கப்பூரின் கல்வி முறையிலும் வாசிப்புக் கற்பித்தலின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

## இலக்கிய மீள்பார்வை: வாசிப்புத் திறன் மேம்பாட்டில் கூடிக் கற்றல் முறைமை

இந்த ஆய்வின் இலக்கிய மீள்பார்வை, வாசிப்புத் திறன் என்றால் என்ன, மாணவர்கள் வாசிப்பதில் என்னென்ன சிரமங்களை எதிர்கொள்கிறார்கள், கூடிக் கற்றல் முறைக் கற்றலின் அடிப்படைத் தத்துவங்கள் யாவை, வாசிப்புத் திறனை வளர்க்க ஏற்கனவே ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்ட கூடிக் கற்றல் முறைக் கற்றலின் உத்திகள் என்னென்ன, முந்தைய ஆய்வுகளில் இன்னும் முழுமையாக ஆராயப்படாத தகவல்கள் என்னென்ன என்பதை ஆழமாகப் பார்க்கிறது. குறிப்பாக, சிங்கப்பூர் போன்ற இருமொழிச் சூழலில் தமிழ்மொழி வாசிப்பில் உள்ள தனித்துவமான கூறுகளையும் இது கவனத்தில் கொள்கிறது.

## வாசிப்புத் திறனும் அதன் முக்கியக் கூறுகளும்

வாசிப்பு என்பது ஒரு சிக்கலான அறிவுசார் செயற்பாடு. இது வெறுமனே எழுத்துகளை அடையாளம் காண்பது மட்டுமல்ல; படித்ததைச் சரளமாக வாசிப்பது (தங்குதடையின்றி, சரியான வேகத்தில், ஏற்ற இறக்கத்துடன் வாசிப்பது), வாசித்ததன் பொருளைப் புரிந்துகொள்வது (அந்தத் தகவலை உள்வாங்கிச் சொந்தமாகச் சிந்திக்கும் திறன்), சொற்களில் உள்ள ஒலிகளைப் பிரித்தறிந்து அவற்றை எழுத்துகளுடன் தொடர்புபடுத்துவது (ஒலிப்புணர்வு) ஆகியவற்றை உள்ளடக்கியது. சிங்கப்பூரில், தமிழை இரண்டாவது மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கு இந்த மூன்று திறன்களையும் மேம்படுத்துவது மிகவும் அவசியம் (Govindaswamy, 1983).

## வாசிப்பில் மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள்

மாணவர்கள் வாசிக்கும்போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கலாம்.. சிலருக்குக் கற்றல் குறைபாடுகள் (உதாரணமாக, டிஸ்லெக்சியா) இருக்கலாம். மற்றவர்களுக்கு மொழித்தடை இருக்கலாம், குறிப்பாக தமிழை இரண்டாவது மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கு இது ஒரு பெரிய சவாலாக இருக்கலாம். மேலும், போதுமான பயிற்சி இல்லாமை, வாசிப்பதில் ஆர்வம் இல்லாமை, அல்லது கற்பித்தல் முறைகள் சரியில்லாதது போன்ற காரணங்களாலும் வாசிப்பில் இடர்ப்பாடுகள் ஏற்படலாம். சிங்கப்பூரைப் பொறுத்தவரை, தமிழ்மொழியின் தனித்துவமான ஒலிப்பு முறைகள்,எழுத்து அமைப்புகள் மாணவர்களுக்குக் கூடுதல் சிரமங்களை ஏற்படுத்தலாம் (நா. கோவிந்தசாமி, 1983). இந்தச் சிரமங்கள் அவர்களின் வாசிப்பு வேகத்தையும், புரிந்துகொள்ளும் திறனையும் பாதித்து, கல்வியில் பின்தங்க வழிவகுக்கும்.

## கூடிக் கற்றல் முறைமைக் கற்றலின் அடிப்படைத் தத்துவங்கள்

கூடிக் கற்றல் முறைமைக் கற்றல் என்பது மாணவர்கள் ஒரு பொதுவான இலக்கை அடையச் சிறிய குழுக்களாக இணைந்து வேலை செய்யும் ஒரு கல்வி முறை. இதன் முக்கியமான கொள்கைகள் என்னவென்றால், நேர்மறை சார்பு (குழுவின் வெற்றி ஒவ்வொருவரின் பங்களிப்பைப் பொறுத்தது), தனிநபர் பொறுப்பு (ஒவ்வொரு மாணவரும் தன் வேலையைச் சரியாகச் செய்ய வேண்டும்), சமூகத் திறன்கள் (ஒரு குழுவாக வேலை செய்யத் தேவையான தகவல் பரிமாற்றம், ஒருவருக்கொருவர் உதவுதல் போன்ற திறன்கள்), நேருக்கு நேர் கலந்துரையாடல் (மாணவர்கள் ஒருவருக்கொருவர் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வது), குழுவின் செயல்பாட்டை அவ்வப்போது மதிப்பாய்வு செய்தல் ஆகியவை அடங்கும். இந்த அடிப்படைக் கொள்கைகள் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் ஒருவரோடு ஒருவர் இணக்கமாகப் பழகவும் உதவுகின்றன.

## வாசிப்புத் திறனை மேம்படுத்தப் பயன்படுத்தப்படும் கூடிக் கற்றல் முறைக் கற்றலின் உத்திகள்

ஏற்கனவே நடந்த ஆய்வுகள் வாசிப்புத் திறனை வளர்க்கப் பல கூடிக் கற்றல் முறைகளைப் பயன்படுத்தியுள்ளன. உதாரணமாக, இணைந்து வாசித்தல் (இருவர் சேர்ந்து வாசிப்பது), குழுவாக வாசித்தல், வாசகர் நாடகம் (ஒரு கதையை நாடகமாக வாசிப்பது), ஒருவருக்கொருவர் சொல்லிக் கொடுத்தல் (peer tutoring), குழுவாகச் சேர்ந்து புதிய சொற்களைக் கற்றுக்கொள்வது (collaborative vocabulary building) போன்ற முறைகள் மாணவர்களின் சரளமாக வாசிக்கும் திறனையும், புரிந்துகொள்ளும் திறனையும் அதிகரிக்க உதவுகின்றன (Aruliswari Narayanan, 2001). இந்தக் கற்றல் முறைகள் மாணவர்கள் பயப்படாமல் வாசிக்கவும், ஒருவருக்கொருவர் உதவிக செய்துகொள்ளவும் நல்ல வாய்ப்புகளை உருவாக்குகின்றன. சிங்கப்பூரின் வகுப்பறைச் சூழலிலும் இந்த உத்திகள் பயனுள்ளவையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முன்மொழியப்பட்ட கூடிக் கற்றல் உத்திகள்

வாசிப்புச் சரளத்தன்மையை மேம்படுத்த சாத்தியமான குறிப்பிட்ட கூடிக் கற்றல் முறைக் கற்றல் செயல்பாடுகள், உத்திகள் பின்வருமாறு முன்மொழியப்படுகின்றன: இணை வாசிப்பு (Paired Reading): இரு மாணவர்கள் இணைந்து ஒரு உரையை மாறி மாறி அல்லது ஒரே நேரத்தில் வாசிப்பது. இது தயக்கத்தைப் போக்கவும், சரளமாக வாசிக்கவும் உதவும். குழு வாசிப்பு (Group Reading): மாணவர்கள் சிறிய குழுக்களாக இணைந்து ஓர் உரையை வாசிப்பது. இது ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவும், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் உதவும். நாடக மன்றம் (Reader's Theater): மாணவர்கள் ஒரு கதையின் கதாபாத்திரங்களை ஏற்று உரையாடல்களை வாசிப்பது. இது வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தவும், ஏற்ற இறக்கத்துடன் வாசிக்கவும் உதவும். ஒருவருக்கொருவர் கற்பித்தல் (Peer Tutoring): வாசிப்புத் திறனில் மேம்பட்ட மாணவர், சிரமப்படும் மாணவருக்கு உதவுவது. இது இருவரின் கற்றலுக்கும் பயனுள்ளதாக இருக்கும். கூடிக் கற்றல் முறைச் சொற்களஞ்சிய உருவாக்கம் (Collaborative Vocabulary Building): மாணவர்கள் குழுவாக இணைந்து புதிய சொற்களின் பொருளைக் கண்டறிந்து பயன்படுத்துவது. இது புரிந்துகொள்ளும் திறனை மேம்படுத்தும்.

## உத்திகளை செயல்படுத்துவதற்கான சாத்தியமான வழிமுறைகள்

வகுப்பறைச் சூழலில் இந்த உத்திகளை ஒருங்கிணைப்பதற்கான சாத்தியமான வழிமுறைகள் பின்வருமாறு பரிந்துரைக்கப்படுகின்றன: ஒவ்வொரு வாசிப்புப் பாடத்திலும் குறிப்பிட்ட கூடிக் கற்றல் முறை உத்தியைப் பயன்படுத்துதல். மாணவர்களின் வாசிப்புத் திறன் நிலைகளுக்கு ஏற்பக் குழுக்களை அமைத்தல். ஒவ்வொரு குழுவிற்கும் தெளிவான வாசிப்புப் பணிகளையும், இலக்குகளையும் நிர்ணயித்தல். ஆசிரியர் ஒரு வழிகாட்டியாக இருந்து

மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல். கூடிக் கற்றல் முறைச் செயல்பாடுகளுக்குப் போதுமான நேரத்தையும், வளங்களையும் ஒதுக்குதல். மாணவர்களின் பங்கேற்பையும், கற்றல் முன்னேற்றத்தையும் முறையாக மதிப்பீடு செய்தல்.

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

கூடிக் கற்றல் முறையின் மூலம் வாசிப்புச் சரளத்தன்மையில் ஏற்படக்கூடிய சாத்தியமான முன்னேற்றங்கள் குறித்த கருதுகோள்கள் பின்வருமாறு: மாணவர்களின் வாசிப்பு வேகம், துல்லியம் மேம்படும். வாசிப்பதில் உள்ள தயக்கம் குறைந்து, தன்னம்பிக்கை அதிகரிக்கும், புரிந்துகொள்ளும் திறன் மேம்படுவதால், கற்றல் விளைவுகள் மேம்படும், குழுவாக இணைந்து செயல்படுவதால், சமூகத் திறன்களும் வளரும் (Ng Kim Choy, 2009), சிங்கப்பூர் மாணவர்களின் தமிழ்மொழி வாசிப்புத் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் (Govindaswamy, 1983).

## சாத்தியமான சவால்கள்

கூடிக் கற்றல் முறையைச் செயற்படுத்துவதில் உள்ள சாத்தியமான தடைகளும் அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதற்கான முன்மொழிவுகளும்

சவால்களாக மாணவர்களின் மாறுபட்ட கற்றல் வேகங்களும் திறன்களும். அவற்றின் தீர்வுகளாக மாணவர்களின் நிலைகளுக்கு ஏற்பக் குழுக்களை அமைத்தலும் வேறுபட்ட பணிகளை வழங்குதலும். சவால்களாக சில மாணவர்கள் குழுவில் முழுமையாகப் பங்கேற்காமல் இருப்பது. தீர்வுகளாக ஒவ்வொரு மாணவருக்கும் குறிப்பிட்ட பொறுப்புகளை வழங்குதலும் தனிநபர் பொறுப்பை உறுதி செய்தலும். சவால்களாகக் கூடிக் கற்றல் செயல்பாடுகளுக்குப் போதுமான நேரமின்மை அதன் தீர்வுகளாகப் பாடத்திட்டத்தில் கூடிக் கற்றலுக்கென குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குதலும். சவால்களாக ஆசிரியர்களுக்குக் கூடிக் கற்றல் முறையைப் பயன்படுத்துவதில் போதிய பயிற்சி இல்லாமை. அதன் தீர்வாக ஆசிரியர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளையும் வளங்களை வழங்குதலும். இந்த முன்மொழியப்பட்ட ஆய்வு முறைமை, தரவு சேகரிப்பு இல்லாமல், வாசிப்பில் இடர்ப்பாடுடைய மாணவர்களிடையே சரளமாக வாசிக்கும் ஆற்றலைக் கூடிக் கற்றல் முறைமை வாயிலாக மேம்படுத்துவதற்கான ஒரு கருத்தியல் அடித்தளத்தை வழங்குகிறது. இதன் மூலம் பெறப்படும் நுண்ணறிவுகள், எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகாட்டியாகவும், வகுப்பறை நடைமுறைகளுக்குப் பயனுள்ளதாகவும் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கலந்துரையாடல் (முன்மொழிவு நிலை)

இந்த முன்மொழியப்பட்ட ஆய்வு முறைமை, வாசிப்பில் இடர்ப்பாடுடைய மாணவர்களின் சரள வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் கூடிக் கற்றலின் சாத்தியமான பங்கை ஆராய்வதற்கான ஒரு கருத்தியல் கட்டமைப்பை வழங்குகிறது. இந்தக் கலந்துரையாடல் பகுதியில், முன்மொழியப்பட்ட கட்டமைப்பின் நியாயத்தன்மை மற்றும் பொருத்தப்பாடு, கூடிக் கற்றல் முறை கோட்பாடுகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட உத்திகளின் சாத்தியமான தாக்கம், வாசிப்பு இடர்ப்பாடுடைய மாணவர்களின் கற்றலில் இந்த ஆய்வு எவ்வாறு பங்களிக்கும் என்பதற்கான விவாதங்கள் மற்றும் எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகள் ஆகியவை விரிவாக ஆராயப்படுகின்றன. சிங்கப்பூரின் கல்விச் சூழல் குறிப்பாக, தமிழ்மொழி கற்பித்தலின் தனித்துவமான அம்சங்கள் இந்த விவாதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன (Govindaswamy, 1983).

## முன்மொழியப்பட்ட கட்டமைப்பின் நியாயத்தன்மை மற்றும் பொருத்தப்பாடு

இந்த ஆய்வின் முன்மொழியப்பட்ட கருத்தியல் கட்டமைப்பு, வாசிப்புத் திறன் மேம்பாடு மற்றும் கூடிக் கற்றல் குறித்த நிறுவப்பட்ட கோட்பாடுகள் மற்றும் முந்தைய ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது (Ng Kim Choy, 2009; Aruliswari Narayanan, 2001). வாசிப்புத் திறனின்

முக்கியக் கூறுகளான சரளம், புரிதல், ஒலிப்புணர்வு (Govindaswamy, 1983) ஆகியவை வாசிப்பில் இடர்ப்பாடுடைய மாணவர்களின் சவால்களை அடையாளம் காணவும், கூடிக் கற்றல் உத்திகளைப் பயன்படுத்தி அவற்றை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பதையும் புரிந்துகொள்ள உதவுகின்றன. சிங்கப்பூரின் வகுப்பறைச் சூழலில், குறிப்பாக தமிழை இரண்டாவது மொழியாகக் கற்கும் மாணவர்களின் தேவைகளை இந்த கட்டமைப்பு கவனத்தில் கொள்கிறது. மாணவர்களின் மாறுபட்ட கற்றல் பாணிகள் மற்றும் வேகங்களுக்கு ஏற்றவாறு கூடிக் கற்றல் உத்திகளை வடிவமைப்பதன் முக்கியத்துவத்தையும் இது வலியுறுத்துகிறது. எனவே, முன்மொழியப்பட்ட கட்டமைப்பு, வாசிப்பு இடர்ப்பாடுடைய மாணவர்களின் சரள வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான ஒரு பொருத்தமான மற்றும் நியாயமான அணுகுமுறையை வழங்குகிறது.

## கூடிக் கற்றல் கற்றல் கோட்பாடுகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட உத்திகளின் சாத்தியமான தாக்கம்

முன்மொழியப்பட்ட இணை வாசிப்பு, குழு வாசிப்பு, வாசகர் நாடகம், ஒருவருக்கொருவர் கற்பித்தல் மற்றும் கூடிக் கற்றல் சொற்களஞ்சிய உருவாக்கம் போன்ற கூடிக் கற்றல் உத்திகள், கூடிக் கற்றலின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஆகின்றன. நேர்மறை சார்பு என்ற கோட்பாடு, குழு உறுப்பினர்கள் ஒருவரின் வாசிப்பு முன்னேற்றம் மற்றவர்களின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. தனிநபர் பொறுப்பு ஒவ்வொரு மாணவரும் வாசிப்புச் செயல்பாட்டில் தீவிரமாகப் பங்கேற்கவும், தங்கள் பங்களிப்பிற்குப் பொறுப்பேற்கவும் ஊக்குவிக்கிறது. சமூகத் திறன்கள் குழுவாக இணைந்து பணியாற்றுவதன் மூலம் வளர்கின்றன. நேருக்கு நேர் ஊடாடல் மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யவும், கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. சிங்கப்பூரின் வகுப்பறைச் சூழலில், இந்த உத்திகள் மாணவர்களிடையே ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கும் கற்றல் சூழலை உருவாக்கவும், வாசிப்பதில் உள்ள தயக்கத்தைக் குறைக்கவும், தன்னம்பிக்கையை அதிகரிக்கவும் உதவும். குறிப்பாக, தமிழ்மொழி வாசிப்பில் உள்ள ஒலிப்பு மற்றும் சொற்களஞ்சியச் சவால்களை எதிர்கொள்ள இந்த உத்திகள் பயனுள்ளதாக இருக்கும் (Govindaswamy, 1983).

## வாசிப்பு இடர்ப்பாடுடைய மாணவர்களின் கற்றலில் இந்த ஆய்வு எவ்வாறு பங்களிக்கும் என்பதற்கான விவாதங்கள்

இந்த ஆய்வு, வாசிப்பு இடர்ப்பாடுடைய மாணவர்களின் கற்றலில் பல வழிகளில் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவதாக, வாசிப்பு இடர்ப்பாடுகளின் தன்மையையும், அவற்றை கூடிக் கற்றல் எவ்வாறு எதிர்கொள்ள முடியும் என்பதையும் ஆழமாகப் புரிந்துகொள்ள இது உதவும். இரண்டாவதாக, சிங்கப்பூர் போன்ற இருமொழிச் சூழலில், தமிழ் மொழி வாசிப்பில் உள்ள குறிப்பிட்ட சவால்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட கூடிக் கற்றல் உத்திகளை அடையாளம் காண இது வழிவகுக்கும். மூன்றாவதாக, ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைகளில் வாசிப்பு இடர்ப்பாடுடைய மாணவர்களின் சரள வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய நடைமுறை உத்திகள் குறித்த நுண்ணறிவுகளை இது வழங்கும். இறுதியாக, இந்த ஆய்வு, வாசிப்புத் திறன் மேம்பாட்டில் கூடிக் கற்றலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம், கல்விக்கொள்கை வகுப்பாளர்களுக்கும், பள்ளி நிர்வாகிகளுக்கும் பயனுள்ள தகவல்களை வழங்கக்கூடும்.

## எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகள் (தரவு சேகரிப்புடன்)

இந்த கருத்தியல் ஆய்வு, எதிர்காலத்தில் தரவு சேகரிப்புடன் மேற்கொள்ளப்படக்கூடிய ஆய்வுகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைக்கிறது. எதிர்கால ஆய்வுகள் பின்வரும் கூறுகளில் கவனம் செலுத்தலாம்: முன்மொழியப்பட்ட பல்வேறு கூடிக் கற்றல் உத்திகளின் செயல்திறனை வகுப்பறைச் சூழலில் சோதனை செய்து, அவற்றின் தாக்கத்தை அளவிடுதல். வாசிப்பு இடர்ப்பாடுகளின் வெவ்வேறு நிலைகளைக் கொண்ட மாணவர்களுக்கு எந்த மாதிரியான

கூடிக் கற்றல் உத்திகள் மிகவும் பொருத்தமானவை என்பதை ஆராய்தல். கூடிக் கற்றல் செயல்பாடுகளில் மாணவர்களின் ஈடுபாடு மற்றும் அவர்களின் சமூக-உணர்ச்சி வளர்ச்சியில் இதன் தாக்கம் குறித்து ஆய்வு செய்தல். ஆசிரியர்களின் பயிற்சி மற்றும் கூடிக் கற்றல் உத்திகளை வகுப்பறையில் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகளை ஆராய்தல். நீண்ட காலத்திற்கு மாணவர்களின் வாசிப்புத் திறன் மற்றும் ஒட்டுமொத்த கல்வி அடைவில் கூடிக் கற்றலின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல். சிங்கப்பூரின் கல்விச் சூழலில், எதிர்கால ஆய்வுகள் தமிழ்மொழி வாசிப்பில் உள்ள குறிப்பிட்ட சவால்களை எதிர்கொள்வதற்கான மிகவும் பயனுள்ள கூடிக் கற்றல் உத்திகளை அடையாளம் காணவும், ஆசிரியர்களுக்குப் பொருத்தமான பயிற்சி முறைகளை உருவாக்கவும் கவனம் செலுத்தலாம் (Govindaswamy, 1983). சுருக்கமாக, இந்த முன்மொழியப்பட்ட ஆய்வு முறைமை, வாசிப்பு இடர்ப்பாடுடைய மாணவர்களின் சரள வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் கூடிக் கற்றலின் சாத்தியமான நன்மைகளை ஆராய்வதற்கான ஒரு உறுதியான கட்டமைப்பை வழங்குகிறது. எதிர்கால ஆய்வுகள், இந்த கருத்தியல் நுண்ணறிவுகளை நடைமுறைப்படுத்தவும், வாசிப்புத் திறன் மேம்பாட்டிற்கான பயனுள்ள உத்திகளை உருவாக்கவும் உதவும்.

## முடிவுரை

இந்த முன்மொழியப்பட்ட ஆய்வு, வாசிப்பில் இடர்ப்பாடுடைய மாணவர்களின் சரள வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் கூடிக் கற்றல் முறைமையின் முக்கியத்துவத்தை ஆழமாக வலியுறுத்துகிறது. சிங்கப்பூரின் கல்விச் சூழலில், குறிப்பாக தமிழ்மொழி கற்கும் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான சாத்தியமானத் தீர்வுகளை ஆராய்வது காலத்தின் தேவையாகும். இந்த ஆய்வு, கூடிக் கற்றலின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி வாசிப்பு இடர்ப்பாடுகளைக் குறைக்கக்கூடிய பல்வேறு உத்திகளை முன்மொழிகிறது. வாசிப்பில் சிரமப்படும் மாணவர்கள், கல்வியின் பிற நிலைகளிலும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். சரளமாக வாசிக்கும் திறனை மேம்படுத்துவதன் மூலம், அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்துவது மட்டுமல்லாமல், பாடப்பொருளைப் புரிந்துகொள்ளும் திறனையும் அதிகரிக்க முடியும். கூடிக் கற்றல் முறையானது, மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வதற்கும், பாதுகாப்பான கற்றல் சூழலில் பங்கேற்பதற்கும் வாய்ப்பளிக்கிறது. இதன் மூலம், வாசிப்பதில் உள்ள தயக்கம் குறைந்து, மாணவர்கள் ஆர்வத்துடன் கற்க முடிகிறது. இந்த ஆய்வின் மூலம் முன்மொழியப்பட்ட உத்திகள் (இணை வாசிப்பு, குழு வாசிப்பு, வாசகர் நாடகம், ஒருவருக்கொருவர் கற்பித்தல், கூடிக் கற்றல் சொற்களஞ்சிய உருவாக்கம்) சிங்கப்பூரின் வகுப்பறைச் சூழலில் நடைமுறைப்படுத்தப்படும்போது, தமிழ்மொழி கற்கும் மாணவர்களின் வாசிப்புத் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். மேலும், இந்த ஆய்வு ஆசிரியர்களுக்கு வாசிப்பு இடர்ப்பாடுடைய மாணவர்களை அணுகுவதற்கான புதிய கற்பித்தல் உத்திகளை வழங்குகிறது. முடிவாக, இந்த முன்மொழியப்பட்ட ஆய்வு, வாசிப்பில் இடர்ப்பாடுடைய மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் கூடிக் கற்றல் ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. எதிர்கால ஆய்வுகள், இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தி, அதன் விளைவுகளை அளவிடுவதன் மூலம், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு மேலும் பங்களிக்க முடியும்.

## References

Aruliswari Narayanan, (2001) Eliminating pronunciation errors in reading skills of fifth grade students through collaborative learning. Research paper – Teachers Education Association, Raja Chamalaivar Campus, 23-43.

Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K.P. (2021) Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. Muallim Journal of Social Sciences and Humanities, 176-182.

Govindaswamy, N. (1983) Teaching reading: The Singapore experience. N. Govindaswamy's pedagogical studies (pp. 1-19). Tamil Kalai Press.

Ng Kim Choy. (2009). Pembelajaran Koperatif. Available at: http://www.teachersrock.net/koperatif.htm

Rajandran, N., Thamburaj, K.P., & Ravi, R. (2022) Correlation between Reading Habit and Reading Skill among Students. Journal of Valartamil, 3(2), 34-46.

## Conflict of interest

The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Kingston Pal Thamburaj, Pon Sasikumar, G. Ramesh, Improving Reading Fluency in Students with Low Reading ability through a Blended Learning Approach, Indian Journal of Tamil, 6(4), (2025) 1-9. https://doi.org/10.54392/ijot2541